4. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

ஈ. நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறும் பகுதிகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவின்மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் மீதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீதும் தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்டிப் பேசிய பகுதிகள், பேரவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. முன்கூட்டியே தகுந்த ஆதாரங்களைப் பேரவைத் தலைவரிடம் காட்டி அவரது அனுமதி பெறாமல் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஆகையினால் அவை பேரவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. பத்திரிகைகளும் அவற்றை வெளியிடக் கூடாது என்று தெரிவிக்கிறேன்.

3. அரசினர் சட்ட முன் வடிவுகள்.—தொடர்ச்சி

(இ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களிடைய மேலான ஆலோசனைகளை இங்கே சொல்லி இருக்கிறார்கள். இந்த சட்டமுன்வடிவு பற்றி இங்கே நான் விளக்கமாகச் சொல்லத் தேவையில்லை என்றாலும் சிலவற்றைச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த சட்ட முன்வடிவு இங்கே வரும் என்றும், இது பேசப்படும் என்றும், இது நிறைவேற்றப்படும் என்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல முன்னாலே ஆளும் கட்சியாக இருந்து, முதலமைச்சராக இருந்த, இன்றைக்கு எதிர்க்கட்சியாக இருக்கின்ற எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கும் மிக நன்றாகத் தெரியும். அப்படி எல்லாம் தெரிந்து, இங்கே பேசுவதற்குரிய வாய்ப்புக்கள் இருக்கும் என்று தெரிந்துதான் இப்படிப்பட்ட ஒரு நிலைமையை உருவாக்கினார்கள் என்பதை நான் மிக மிக வருத்தத்துடன் இங்கே சொல்ல விரும்புகிறேன். அவ்வாறு வருத்தத்துடன் சொல்வதற்குக் காரணம் இப்படி ஒரு பிரச்சினை நீதிமன்றத்திற்குச் சென்றுவிட்டால் அதற்குப் பிறகு இங்கே பேச முடியாது என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் பலமுறை பேசுகிறபோதெல்லாம் எழுதுகிற போதெல்லாம் இதிலே பெரிய ஊழல்கள் வந்திருக்கின்றன, சலுகைகள் காட்டப்பட்டிருக்கின்றன, இதிலே பல குறைகள் இருக்கின்றன என்றெல்லாம் தொடர்ந்து சொல்லியதோடு மட்டுமல்ல, நீதிமன்றத்திற்கு வரத்தயாரா, வந்தால் இவற்றை எல்லாம் நிரூபிப்பேன் என்று பலமுறை சொல்லிக்கொண்டே வந்தார்கள். ஆனால் நீதிமன்றத்திலே வழக்கு போட்டதற்குப் பிறகு இங்கே சட்டமன்றத்திலே வந்து பேசினால் அது எப்படிச் சரியாகும்